தென்பாண்டி நாட்டுப் படைப்பாளர்களின்

# சமூகச் சிந்தனைகள்



தென்பாண்டி நாட்டுப் படைப்பாளர்களின் சமூகச் சிந்தனைகள்

செம்மூதாய் பதிப்பகம்
A3, அபிராமி நிவாஸ்
தெ. 43, வால்மீகி தெரு
கிழக்குத் தாம்பரம்
சென்னை 600 059
கைபேசி : 9444 200 369
semmoodhai@gmail.com

ISBN 978-93-81006-05-4

ரூ. 400/-

# நூல் விபரம்


தலைப்பு : தென்பாண்டி நாட்டுப் படைப்பாளர்களின் சமூகச் சிந்தனைகள் (நெல்லை - தொகுதி - I)

பொருள் : ஆய்வுக் கட்டுரைகள்

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்கள்

முதற்பதிப்பு : டிசம்பர், 2015

வெளியீடு : செம்மூதாய் பதிப்பகம்
ஏ3, அபிராமி நிவாஸ், 43 வால்மீகி தெரு
கிழக்குத் தாம்பரம், சென்னை - 600 059.
கைபேசி : 9444200369 / 9444327963

கணினி : செந்தமிழ் தட்டச்சு மையம், சென்னை - 63.

அட்டைப்படம் : அ.ச.ஜோ. அலாய்சியஸ்

அச்சாக்கம் : நோவினா ஆப்செட் பிரிண்டிங்,
164, வி.ஆர்.பிள்ளை தெரு,
ஐஸ் அவுஸ், சென்னை - 600 005.

பக்கங்கள் : XVIII + 638 = 656

விலை : உ.ரூ. 400 /-

ISBN : 978 - 93 - 81006 - 05 - 4


## THENPANDINATTU PADAIPPALARKALIN SAMUGA SINTHANAIGAL (Nellai - Part I)


Copyright : Editor's



First Edition : December, 2015

Published : **Semmoodhai Pathippagam**
A3, Abirami Nivas, 43 Valmiki Street
East Tambaram, Chennai-600 059.
Cell : 944200369 / 9444327963

Computer : **Senthamizh Typing Centre**, Chennai-63.

Printing at : **Novena Offset Printing Co.**,
No. 164, Venkatarangam Street,
Ice House, Chennai - 600 005.

Pages : XVIII + 638 = 656

Price : Rs. 400/-

105. **முனைவர் ஆ. ரந்திர்குமார்** 453
பேராசிரியர் ஞா. ஸ்டீபனின் வாழ்வும் பணியும்

106. **முனைவர் இர. கற்பகம்** 458
தமிழறிஞர் தளவாய் தீ. இராமசாமியின்
வாழ்வும் பணியும்

107. **முனைவர் பா. அருள்மனோகரி** 462
தமிழ்ப் படைப்புலகில் நெல்லை மக்களின்
ஆளுமைத் திறன்

108. **மா. தென்கரை மகராஜபிள்ளை** 467
யதார்த்த வாதமும் நாஞ்சில் நாடனின்
தலைகீழ் விகிதங்கள் நாவலும்

109. **நா. சுரேந்திரன்** 470
உப்புவயல் புதினம் காட்டும் உத்திமுறைகள்

110. **முனைவர் ம. நூர்ஜஹான்** 474
தனுஷ்கோடி இராமசாமி கவிதைகளில்
பாரதியாரும் குழந்தைத் தொழிலாளரும்

111. **முனைவர் சீனி. அன்பரசன்** 479
சித்தர்களின் மாந்திரிகம்

112. **Cynthia George** 482
LES VERS DE TERRE

113. **முனைவர் க. லதா** 485
மேலாண்மையின் மொழிநடை

114. **முனைவர் மா. பாப்பா** 490
பாரதி படைப்புகளில் சமூகச் சிந்தனைகள்

115. **ச. அ. சுஜா** 495
இனி உணர்த்தும் உறவுநிலையும் உழைப்பும்

116. **முனைவர் தா. நீலகண்டபிள்ளை** 499
வரலாற்று ஆய்வாளர் சிவ. பத்மநாபன்

117. **இல. சுப்பிரமணியன்** 503
பேராசிரியர் எஸ். தோதாத்ரியின்
தமிழ் இலக்கியப் பணிகள்

118. **இல. சுப்பிரமணியன்** 508
குமரி ஆதவனின் தமிழ் இலக்கியப் படைப்புகள்


Scanned by CamScanner

# 115. 'இனி' உணர்த்தும் உறவுநிலையும் உழைப்பும்

**ச. அ. சுஜா**
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ் உயராய்வு மையம்*
*பாத்திமாக் கல்லூரி (தன்னாட்சி)*
*மதுரை.*

ஊடகங்களின் ஆதிக்கத்தில் உலகம் திணறிக் கொண்டிருக்கும் வேளை இது. உண்மையான உழைப்பை எடுத்துச் சொல்லும் படைப்புகள் குறைந்து வரும் வேளை. உழைக்கும் மனிதனையும், மனிதம் சார்ந்த நிலையும் மதிக்காத மனித நேயமற்ற சமுதாயமாக நாம் மாறிக் கொண்டிருக்கிறோம். அம்மாற்றத்திலிருந்து சற்றே பின் திரும்பிப் பார்க்கும்போது விளைநிலங்கள் வீட்டு மனைகளாகி விட்டன என்பதை நாம் அழுத்தத்தோடு எண்ணிப் பார்க்கவேண்டியுள்ளது. ஏன்? விளைநிலங்களின் வீழ்ச்சிக்கும், வீட்டுமனைகளின் எழுச்சிக்கும் காரணமாய் அமைந்தவை எவை? இனி உலகம் சந்திக்கப்போகும் சவால்கள் என்ன என்பதைச் சிந்திக்கவேண்டும்.

20 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட மேலாண்மை பொன்னுச்சாமியின் 'இனி' என்னும் புதினம் உழவில் ஏற்பட்ட மாற்றங்களையும், அதன்வழி உழவர்களின் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களையும் எதார்த்தமாக எடுத்துரைக்கிறது. உறவு நிலையின் உன்னதத்தை இப்புதினம் பல இடங்களில் பேசுகிறது. உழவர் நிலையைப் பற்றிப் பேசும்பொழுதும் உறவுகளின் வலிமையையும் எடுத்துக்கூறத் தவறவில்லை. இப்புதினத்தின் மூலம் "உழுதவன் கணக்குப் பார்த்தா உழக்குக்கூட மிஞ்சாது. சம்சாரி கணக்குப் பார்த்தா சாட்டைக் கம்பு கூட தேறாதுன்னும்" உணர்த்துகிறார் ஆசிரியர். உழைப்பவனை சம்சாரி என்ற வார்த்தையிலேயே ஆசிரியர் காட்டுகிறார்.

ஜம்புலிங்க நாடார் என்ற சம்சாரி மண்ணை நேசிப்பவன். தன் உயிரை விட மேலாகக் கலப்பையை மதித்தவன். இவனுக்கு வாய்த்த மனைவி மகாலட்சுமியும் மண்ணையும் அதில் உழைப்பையும் மதித்தவள் உழைப்பிற்காக வாழ்ந்தவள் என்று எண்ணத் தோன்றும். ஆனால் இவர்களுக்குப் பிறந்த பொன்னையா, ராமையா இருவரும் உழைப்பில் நாட்டமில்லாதவர்கள். சம்சாரி வாழ்க்கையே வீண் என்று வாதாடுபவர்கள். அந்த அளவிற்குச் சம்சாரி வாழ்க்கை கடனாளி வாழ்க்கைதான் என்று நினைத்தனர் அடுத்த தலைமுறை. இவர்களின் அடுத்தத் தலைமுறையில் சுப்பிரமணி என்ற பேரன் மட்டும் தாத்தா மேல் உயிராக இருப்பவன். அவரைப் போலவே மண்ணையும், உழைப்பையும் மதித்தவன். 'ஐயாப்பா' என்று அவரை அன்போடு அழைத்தவன். பெற்ற பிள்ளைகள் அவரை மதிக்காத போதும், பேரன் தாத்தாவுக்குத் துணையாய் இருந்தான்.